புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஆகஸ்டு 10, 2023 • புரட்சி 23 • முழக்கம் 30 • விலை ரூ.3.00

# கழக கூட்டத்திற்காக கோயில் விழாவை நிறுத்தி வைத்த மக்கள்

திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் எது திராவிடம்? எது சனாதனம்? என்ற தலைப்பில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி வருகிறது. சென்னை, சேலம் (மே), சேலம் (கி), திருப்பூர், ஈரோடு (தெ), ஈரோடு (வ), கோவை, கடலூர், திருச்சி என பல்வேறு மாவட்டங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கழகத் தோழர்களே மிகச் சிறந்த பேச்சாளர்களாக மாறி திராவிடத்தின் சாதனைகளையும் சனாதனத்தின் ஆபத்துகளையும் எளிமையான மக்கள் மொழியில் மக்களிடம் பேசுகிறார்கள். இந்த பிரச்சாரக் கூட்டங்களின் வழியாக கழகத்திற்கு சிறந்த பேச்சாளர்கள் உருவாகி வருவது திராவிடர் விடுதலைக் கழகத்திற்கு சிறப்பாகும்.

இதுவரை சென்னையில் 40க்கும் மேற்பட்ட நடத்தப்பட்டுள்ளது. சென்னையில் நாத்திகன் - மாவட்ட செயலாளர் உமாபதி இணைந்து நடத்துகிற நையாண்டி உரையாடல், இசையுடன் நடக்கின்ற இந்த நிகழ்ச்சி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. அதேபோல் கோவையில் நிர்மல்குமார் - தமிழ்ச்செல்வி ஆகியோர் இணைந்து இத்தகைய உரையாடல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இதில் ஒரு நிகழ்வை நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

கடந்த ஆகஸ்டு 3-ஆம் தேதி வடசென்னை ஓட்டேரியில் தெருமுனை கூட்டத்தை கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அங்கு சென்றதற்குப் பிறகுதான் எல்லையம்மன் கோயில் திருவிழா நடைபெறுகிறது என்பது தெரிய வந்தது. எல்லையம்மன் கோயில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, ஒலிபெருக்கியில் பக்தி பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தது. தோழர்கள் அங்கிருந்த பக்தர்களிடம் சென்று சில மணி நேரம் பக்தி பாடல்களை ஒலிபரப்புவதை நிறுத்த முடியுமா? நாங்கள் இத்தகைய பிரச்சாரத்திற்கு வந்துள்ளோம் என்று அன்பாக வைத்த வேண்டுகோளை உடனே அவர்கள் ஏற்றுக் கொண்டு ஒலிபெருக்கியில் பக்தி பாடல்களை ஒளிபரப்புவதை நிறுத்திக் கொண்டனர். சுமார் ஒன்றரை மணி நேரம் நையாண்டி உரையாடலை பக்தர்கள் வந்திருந்து பார்வையாளராக கேட்டார்கள். கழகத் தோழர்கள் பக்தர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டனர்.

திராவிடர் இயக்கம் என்றாலே, திராவிடர் விடுதலைக் கழகம் என்றாலே "இந்துக்களுக்கு எதிரி" என்று எதிரிகள் செய்துவரும் பிரச்சாரத்திற்கு சரியான பதிலடியாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. பக்தி என்பது வேறு, உரிமை என்பது வேறு, பக்திக்காக எங்கள் உரிமைகளை விட்டுத் தர மாட்டோம் என்ற சிந்தனைப் போக்கு இன்றைக்கு மக்களிடையே வளர்ந்திருப்பதை இந்த நிகழ்ச்சி உணர்த்திக் காட்டுகிறது.

கழகத் தோழர்கள் இன்னும் சில பகுதிகளில் இத்தகைய தெருமுனை பிரச்சாரத்தை தொடங்காமல் இருக்கிறார்கள், விரைவில் தொடங்க இருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன, அப்படி தொடங்கப்படாத இடங்களில் இத்தகைய கூட்டங்களை தொடங்க வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் முன்வைக்கிறோம். ஒவ்வொரு நாளும் தெருமுனைக் கூட்டத்திற்காக தங்களுடைய உழைப்பை செலுத்தி அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகிற திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுக்கு நமது மகிழ்ச்சிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் பிரச்சாரம் ஒரு போதும் வீண் போகாது, மக்கள் மத்தியில் மகத்தான நம்பிக்கையை உருவாக்கும்.

# தமிழகத்தில் - மோடி எதிர்ப்பு அலை

*தமிழ்நாட்டு மக்கள் மோடி ஆட்சியை வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். கழகம் நடத்தும் கூட்டங்களில் நன்றாகவே காண முடிகிறது என்று கழகத் தோழர்கள் கூறுகின்றனர். கழகம் நடத்திவரும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் :-*

*சென்னை : எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் இன்று (31.07.2023) திங்கள் கிழமை அன்று 33-வது கூட்டம் மாலை 5 மணிக்கு சேத்துப்பட்டு ஓசான்குளத்திலும், 34-வது கூட்டம் மாலை 7 மணிக்கு நேரு பார்க் ஹவுசிங் போர்டிலும் நடைபெற்றது.*

*(01.08.2023) செவ்வாய் கிழமை மாலை 5 மணிக்கு லயோலா கல்லூரி அருகிலுள்ள புஷ்பா நகர் ஹவுஸிங் போர்டிலும், மாலை 7 மணிக்கு சூளைமேடு, சௌராட்டிர நகர் முதல் தெருவிலும் நடைபெற்றது. (02.08.2023) புதன் கிழமை மாலை 5 மணிக்கு பெருமாள் கோயில் வீதியிலும், மாலை 7 மணிக்கு MMDA காலனி வாட்டர் டேங்க் அருகிலும் நடைப்பெற்றது. (03.08.2023) வியாழன் அன்று மாலை 5 மணிக்கு ஓட்டேரி 5 லைட் பகுதியிலும், மாலை 7 மணிக்கு புரசைவாக்கம் வெள்ளாள தெருவிலும் நடைப்பெற்றது. (04.08.2023) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு 41-வது கூட்டம் அயனாவரம், நம் ஆழ்வார்பேட்டை மார்கெட்டிலும், 42-வது கூட்டம் பெரம்பூர் மங்களாபுரம் ஜமாலியா பகுதியிலும் நடைப்பெற்றது. (05.08.2023) சனிக்கிழமை மாலை 5 அயனாவரம் NMK தெருவிலும், மாலை 7 பங்காரு தெருவிலும் நடைபெற்றது.*

*நாத்திகன் - உமாபதி குழுவின் அரசியல் நைய்யாண்டி உரையாடலுடன் கூட்டங்கள் தொடங்கியது.*

*கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுரேசு, மக்கள் அதிகாரம் காமராசு, குகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வட்டச் செயலாளர் ஆரோக்கியதாஸ், திண்டுக்கல் பெரியார் நம்பி, சேத்துப்பட்டு இராசேந்திரன், திருப்பூர் பிரசாந்த் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.*

## ஆனூர் ஜெகதீசன் பங்கேற்பு

*05.08.2023 சனிக்கிழமை அயனாவரம் பங்காரு தெருவில் நடைப்பெற்ற கூட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.*

*சென்னை மாவட்டக் கழகம் சார்பில் வேளச்சேரி, இராயப்பேட்டை, வட சென்னை ஆகிய பகுதிகளில் இதுவரை 44 கூட்டங்கள் நிறைவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

*சேலம் : தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் 04.08.2023 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மேட்டூர் 4 ரோடு, அரசு கலைக் கல்லூரி எதிரிலும், இரண்டாவது கூட்டம் தங்கமாபுரிபட்டினம் புதுப்பாலம் அருகிலும் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்கு சுகந்தன் பிரபாகரன் தலைமை தாங்கினார். தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் (மே) மாவட்டத் தலைவர் சூரியகுமார், தமிழ்நாடு மாணவர் கழகம் நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சேலம் (மே) மாவட்ட செயலாளர் கோவிந்தராசு பகுத்தறிவுப் பாடல்களை பாடினார்.*

*மணிப்பூரில் நடப்பது என்ன? என்ற தலைப்பில் சட்டக்கல்லூரி மாணவி இரண்யா, சனாதனமும் - பெண்களும் என்ற தலைப்பில் வழக்கறிஞர் கண்ணகி, சனாதனமும் - மாநில உரிமைகளும் என்ற தலைப்பில் செல்வகுமார், சனாதனமும் - தமிழ்நாடும் என்ற தலைப்பில் சபரிகிரி, சனாதனமும் - திராவிட கல்வியும் என்ற தலைப்பில் திருப்பூர் மகிழவன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள். அதியன் நன்றி கூறினார், கூட்டத்தை நாகராஜ், சுகந்தன் பிரபாகரன் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.*

*05.08.23 சனிக்கிழமை காவலாண்டியூர் கிளைக்கழக சார்பில் 9வது தெருமுனைக் கூட்டம் காரைக்களம் பகுதியில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்கு இராஜா வரவேற்புரையாற்றினார். சித்திரப்பட்டிபுதூர் ஊராட்சி மன்றத் தலைவர் இராஜா தலைமையில், ஊர் கொத்துக்காரர் மாதப்பன், காவை சென்னப்பன் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் துவங்கியது.*

*கழகம் தயாரித்துள்ள பெரியார், அம்பேத்கர், தி.வி.க. கடந்துவந்த பாதை உள்ளிட்ட ஆவணப் படங்கள் திரையிடப்பட்டது. தொடர்ந்து காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது .*

*அடுத்ததாக கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், வி.சி.க. கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் சேட்டுக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தமிழ்நாடு மாணவர் கழக இளவரசன் நன்றி கூறினார்.*

*காவலாண்டியூர் கிளைக் கழக சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் 26.07.2023 அன்று மாலை 6.00 மணியளவில் செட்டியூரிலும், 30.07.2023 அன்று மாலை 6 மணி அளவில் மூலக்கடை பகுதியிலும், 01.08.2023 அன்று 7வது கூட்டம் காந்தி நகரிலும், 05.08.2023 மாலை 7.00 மணியளவில் 9வது தெருமுனைக் கூட்டம் காரைக்களம் பகுதியிலும் நடைபெற்றது.*

*பல்வேறு இடங்களில் நடைபெற்ற இந்த கூட்டங்களுக்கு இராஜா, இளவரசன், பச்சியப்பன் ஆகியோர் வரவேற்புரையாற்றினோர்.*

*சித்திரப்பட்டிபுதூர் ஊராட்சி மன்றத் தலைவர் இராஜா, காவை சசிகுமார் தலைமையில், ஊர் கொத்துக்காரர் மாதப்பன், காவை*

4ம் பக்கம்

## தலையங்கம்

### மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் நுழைகிறார் ராகுல்காந்தி!

எம்பி பதவி பறிக்கப்பட்ட ராகுல் காந்தி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புடன் நாடாளுமன்றத்துக்குள் மீண்டும் கம்பீரமாக அடியெடுத்து வைத்துள்ளார். நாடளுமன்ற அலுவலகத்தில் உள்ள கலைஞர் படத்துக்கு மாலை அணிவித்து சென்றது கூடுதல் சிறப்பு. நாடாளுமன்ற செயலவை அவர் பதவி பறிப்பை நீக்கம் செய்து அறிவித்திருக்கிறது. தொடர்ந்து சந்தித்து வரும் மக்கள் சக்தியின் எதிர்ப்புகளால், ஒன்றிய ஆட்சி தனது பழிவாங்கும் ஆணவ அடக்குமுறைகளை தளர்த்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறது. உச்சநீதிமன்ற நீதிபதி பி.ஆர் கவாய் தலைமையிலான அமர்வு ராகுல்காந்திக்கு அதிகபட்சமான இரண்டு ஆண்டு சிறை தண்டனை விதிப்பதற்கான காரணம் எதையும் குஜராத் நீதிமன்றம் ஏன் கூறவில்லை என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறது. இந்த இரண்டு ஆண்டு தண்டனைகளால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டதோடு அடுத்த ஆறு ஆண்டுகள் அவர் தேர்தலில் போட்டியிட முடியாமலும் தடுக்கப்பட்டார் , இரண்டு ஆண்டுகளில் ஒரு நாள் குறைத்து தண்டனை வழங்கப்பட்டிருந்தாலும் பதவி பறிப்பும் போட்டியிடும் தடையும் உருவாகியிருக்காது.

ராகுல் காந்தி மோடியை பற்றி தான் கூறிய கருத்து அனைத்து மோடிகளுக்குமானது அல்ல என்ற நிலையில் உறுதியோடு இருந்தார், அதற்காக வருத்தம் தெரிவிக்கவும் அவர் மறுத்துவிட்டார். அவர் வருத்தம் தெரிவித்திருந்தால் இந்த தண்டனையை எதிர்கொள்ள வேண்டிய தேவையே இருந்திருக்காது.

ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சி பார்ப்பனர்களின் பிடியில் சிக்கி தவித்தது. இந்து மகாசபையில் உறுப்பினராக இருந்து கொண்டே காங்கிரஸ் உறுப்பினராகவும் இருந்தார்கள், காங்கிரஸ் மாநாடுகளில் ஒரே மேடையில் இந்து மகாசபை மாநாடும் நடக்கும், காங்கிரஸ் மாநாடும் நடக்கும், காங்கிரஸ் மாநாடுகளில் பிராமணர்களுக்காக தனி கூடாரங்கள், தனியாக பிற சாதியினர் கண்படாமல் சாப்பாடுகள், அவர்கள் வேத சடங்குகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காந்தியே இந்த பாகுபாட்டை கண்டித்து எழுதியிருக்கிறார் . பெரியார் காங்கிரஸ் கட்சியிலே கொண்டுவந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமை கோரும் தீர்மானங்களை காங்கிரஸ் பார்ப்பனர்கள் திட்டமிட்டு சதி செய்து புறக்கணித்தனர், அதற்கு பிறகு தான் பெரியார் காங்கிரஸிலிருந்து விலகினார்.

அதே காங்கிரஸ் சோனியாவின் தலைமையில் செயல்பட தொடங்கியபோது காங்கிரஸில் 50 சதவீத பதவிகள் வகுப்புவாரி உரிமை அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் என்ற முடிவை சோனியா எடுத்தார். மண்டல் பரிந்துரையை வி.பி.சிங் அமல்படுத்திய போது ராஜீவ் காந்தி அதை எதிர்த்து பேசினார், அதே காங்கிரஸ் கட்சி தலைமையிலானஐக்கியமுற்போக்குகூட்டணிஆட்சிநடந்தபோது மத்திய கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது. அவசர நிலைக் காலத்தில் கல்வியை மாநில உரிமைப் பட்டியலில் இருந்து பிரித்து ஒத்திசைவு பட்டியலுக்கு கொண்டு சென்றார் இந்திராகாந்தி. இப்போது ராகுல் காந்தி மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி தத்துவத்திற்கும் குரல் கொடுக்கிறார் . சித்தாந்த எதிரி ஆர்.எஸ். எஸ் என்று வெளிப்படையாகவே ராகுல் காந்தி பேசுகிறார்.

26 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய இந்தியா கூட்டணி இந்தியா என்பது ஒற்றை ஆட்சி அல்ல அது மாநில உரிமை சமூக நீதி மதச்சார்பின்மையை உள்ளடக்கியது. அனைத்து பிரிவுகளையும் அங்கீகரித்து ஏற்கும் பன்முகத்தன்மை கொண்டது,(Inclusive Development)என்றுஇந்தியாவிற்காக காங்கிரஸ் ஏற்கனவே கொண்டிருந்த கொள்கைகளை மாற்றிக் கொண்டு மறு வரையறை செய்து இருக்கிறது.

மாநிலங்களில் செல்வாக்கோடு உள்ள மாநிலக் கட்சிகளின் தலைமையிலே தான் தேர்தல் கூட்டணி உருவாகும் என்ற நிலைப்பாட்டிற்கும் அந்த கட்சி வந்துள்ளது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும், காங்கிரஸ் கட்சி தலைவராகவும் தலித் சமூகத்தைச் சார்ந்த அம்பேத்கரிஸ்டான மல்லிகார்ஜூன கார்கேவைதேர்வுசெய்துள்ளதுகாலத்தின்மாற்றத்தைசமூகநீதிப் பார்வையில் அணுகி, கடந்த கால தவறுகளை திருத்திக் கொண்டு சமூக நீதி கண்ணோட்டத்தோடும், இந்துத்துவா எதிர்ப்போடும் காங்கிரஸ் தன்னை வளர்த்து எடுத்து வருகிறது. அனைத்து கட்சிகளும், இயக்கங்களும் இந்த மாற்றத்திற்கு தயாராகி வரும் போது. மாற்றமே கூடாது என்பதுதான் சனாதன தர்மம் என்று செயல்பட்டு வரும் ஒரே அமைப்பு ஆர்.எஸ்.எஸ்சும் அதன் அரசியல் வடிவமான பாஜகவும். காலாவதியான மருந்துகளை பயன்படுத்துவது உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்பதை அவர்கள் உணரவில்லை, உலகம் முழுதும் மக்கள் உரிமை, மதம் கடந்த வாழ்க்கை, அனைவருக்குமான வளர்ச்சி என்ற பாதையில் நடை போட தொடங்கியுள்ள சூழலில் சங் பரிவாரங்களின் செயல்பாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இதை புரிந்து கொள்ள முடியும்.

பாஜக ஆட்சி செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டினால் உடனே காங்கிரஸ் ஆட்சியில் இது நடக்கவில்லையா என்று எதிர் கேள்வி கேட்பதே சங்பரிவாரங்களின் வழக்கமாகிவிட்டது. அன்றைய காங்கிரஸ் வேறு இன்றைய காங்கிரஸ் வேறு. ஆனால் அன்றைய ஆர்.எஸ்.எஸ்-ம் இன்றைய ஆர்.எஸ்.எஸ்-ம் மாற்றத்திற்கு தயாராக மறுக்கும் அமைப்பாகவே உள்ளன என்பதுதான் நாம் அதற்கு தரும் விளக்கம்.

புதிய சமூக பார்வையோடு காங்கிரசை புதிய பாதையில் வழிநடத்த தொடர்ந்து முயற்சித்து வரும் ராகுல் காந்தி இந்த பதவி பறிப்பு அடக்குமுறைகளை சட்ட ரீதியாக எதிர்கொண்டு மீண்டும் நாடாளுமன்றத்திற்குள் நுழைகிறார். இது இந்தியா கூட்டணிக்கு கிடைத்த வெற்றியும் கூட.

# செருப்பை தூக்குகிறார் சீமான்!

*தமிழ்நாட்டில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் திமுகவுக்கும், காங்கிரசுக்கும் தான் வாக்களிக்கிறார்கள், தனது நாம் தமிழர் கட்சிக்கு அவர்கள் வாக்களிப்பதில்லை, அவர்கள் சாத்தானின் பிள்ளைகளாக மாறிவிட்டார்கள், அவர்களை சிறுபான்மையினர் என்று ஒரு போதும் அழைக்கக்கூடாது அப்படி அழைத்தால் அவர்களை நான் செருப்பால் அடிப்பேன், அவர்கள் தமிழர்கள் தான். மொழி, இன அடிப்படையில் தான் ஐரோப்பிய தேசங்கள் பிரிந்திருக்கின்றன. எனவே அவர்களை தமிழர்களாகத் தான் கருத வேண்டுமே தவிர சிறுபான்மை யினராக கருதக்கூடாது என்று சீமான் பேசியிருக்கிறார்.*

*இஸ்லாமியர்களும் கிறிஸ்துவர்களும் யார்? இந்து பார்ப்பனிய வர்ணாசிரம கட்டமைப்பு நிலைநிறுத்திய சாதிய ஒடுக்கு முறைக்கு பலியாகி அதிலிருந்து விடுபடுவதற்காக பல தலைமுறை களுக்கு முன்பே தங்களுடைய கடவுளையும் மதத்தையும் மாற்றிக் கொண்டவர்கள் தான் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும். ஆக அவர்களுடைய மதமாற்றத்திற்கு காரணமே இந்து பார்ப்பனிய சமூகக் கட்டமைப்பு தான். இதற்குக் காரணமாக இருப்பது பார்ப்பன சிறுபான்மையினக் கூட்டம்.*

*பார்ப்பன சிறுபான்மையை விமர்சிக்காத சீமான் ஏன் கிறிஸ்தவ இஸ்லாமிய சிறுபான்மையை மட்டும் பாய்ந்து எதிர்க்கிறார். அங்கேதான் அவர் ஆர்எஸ்எஸ் பி டீமாக செயல்படுகிறார் என்ற முடிவுக்கு நாம் வர வேண்டி இருக்கிறது.*

*சீமான் தமிழர் என்ற அடையாளத்திற்காக மொழி இனத்தை மட்டும் அடிப்படையாக வைத்திருக்கிறாரா? அதுவுமில்லை, நீங்கள் பிறந்த ஜாதிப் பெருமையை ஆதரித்து பேசுங்கள் என்று சில நாட்களுக்கு முன்பு அவர் பேசினார், தமிழர்களுடைய அடையாளம் முருகன் என்று கூறிக்கொண்டு பழனிக்கு காவடி தூக்கினார். தனது மகனுக்கு குருவாயூர் கோயிலில் மொட்டை போட்டு துலாபாரம் கொடுத்தார், கிருஷ்ண ஜெயந்தி தமிழர்களின் பண்பாட்டு விழா என்று பேசுகிறார். நெற்றியில் விபூதியோடு தமிழர்களின் அடையாளத்தை மேடையில் பேசி வருகிறார். கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் தமிழர்களாகிவிட்டால் அவர்களும் பழனிக்கு காவடி தூக்க வேண்டும், கிருஷ்ணனுக்கு துலாபாரம் கொடுக்க வேண்டும், நெற்றியில் விபூதி பூசிக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர்கள் மீது திணிக்க விரும்புகிறார், இதைத்தான் ஆர்.எஸ்.எஸ் கூறுகிறது "இங்கே வாழுகிற கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் பிற மதத்தைச் சேர்ந்தவர்கள், நமது மதத்துக்கு சொந்தக்காரர்கள் அல்ல, அவர்கள் இந்துக்களோடு தங்களை கரைத்துக் கொள்ள வேண்டும்" என்று ஆர்.எஸ். எஸ் கூறுகிறது. அதே குரலை தான் இப்போது சீமானும் கூறுகிறார்.*

*சரி, சிறுபான்மையினர் என்ற சொல்லை சொன்னாலே செருப்பால் அடிப்பேன் என்று சொன்ன சீமான், அவர் செருப்பை தூக்கிக்கொண்டு பல இடங்களுக்கு போக வேண்டும். முதலில் டெல்லிக்கு போக வேண்டும், ஒன்றிய அரசு முஸ்லிம், சீக்கியர், புத்திஸ்ட், கிறிஸ்தவ, ஜெயின், பார்சி ஆகியவரை சிறுபான்மையினர் என்று அங்கீகரித்து வைத்திருக்கிறது. எனவே அங்கே போய் அங்கீகரித்தவர்களை முதலில் செருப்பால் அடிக்க வேண்டும்.*

*டிசம்பர் 18-ஆம் தேதி உலக சிறுபான்மையினர் தினம் என்று ஐநா அறிவித்திருக்கிறது. எனவே ஐநா சபைக்கு போய் ஐநாவின் தலைமை அதிகாரியை செருப்பால் அடிக்க வேண்டும். 1992 ஆம் ஆண்டு இந்திய தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் வந்திருக்கிறது. இதற்கும் அவர் செருப்படி தந்தாக வேண்டும். சிறுபான்மையினரின் நிலைமை பற்றிய ஆராய்வதற்காக நீதிபதி ராஜேந்திர சச்சார் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு அனைத்து பிரச்சினைகளிலும், கல்வி, வேலை வாய்ப்புகளிலும் இஸ்லாமியர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள், சிறைச்சாலைகளில் மட்டும் தான் இஸ்லாமியர்கள் தங்களது விகிதாச்சாரத்திற்கும் அதிகமாக இருக்கிறார்கள் என்று நீதிபதி ராஜேந்திர சச்சார் குழு கூறியது. எனவே ராஜேந்திர சச்சாரையும் இவர் செருப்பால் அடித்து விட்டு வர வேண்டும். ஆக செருப்பால் அடிப்பதற்கே இவருக்கு காலம் முழுவதும் இந்தியாவையும், உலகையும் சுற்றிவருவதற்கு நேரம் சரியாக இருக்கும் போல. இப்படிப்பட்ட மனிதர்கள் இந்த நாட்டில் அதிகாரத்திற்கு வந்தால் தன்னை எதிர்த்து பேசுகிற, தன்னுடைய கருத்துக்கு மாறாக இருப்பவர்களை செருப்பால அடிப்பேன் காலில் போட்டு மிதிப்பேன் என்று சொல்வார், மிஞ்சிப்போனால் துப்பாக்கியால் சுடுவேன் என்று சொன்னாலும் சொல்வார்கள். கேட்டால் இது தமிழர் பண்பாடு என்று சொல்வதற்கும் வியப்பில்லை.*

## ஆசிரியருக்கு 'தகைசால் தமிழர் விருது' ; கழகம் பாராட்டி வரவேற்கிறது.

திராவிடர் கழகத்தலைவர் தமிழகத்தின் மூத்த பெரியாரிஸ்ட், பெரியாரோடு நீண்ட காலம் நெருங்கி பழகி அவரிடம் பாடம் கற்று தமிழ்நாட்டில் வாழ்ந்து



கொண்டிருக்கும் ஒரே தலைவர். தமிழகத்தின் நீண்டகால பொது வாழ்க்கையோடு தன்னை இணைத்துக்கொண்டு தனது 90 ஆவது வயதிலும் இளமைத் துடிப்போடு பணியாற்றி வரும் மதிப்புக்குரிய ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு தமிழக அரசு தகைசால் தமிழர் விருதை வழங்கி இருப்பது பெரியாரியவாதிகளுக்கு பெரு மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த விருதுக்கு அவர் தகுதி நிறைந்தவர் என்பதை அவரது நீண்ட பொது வாழ்க்கையின் வரலாற்றுப் பக்கங்கள் உறுதி கூறிக்கொண்டு இருக்கிறது. அவரது பெரியாரியப் பணி, மேலும் உற்சாகத்துடன் தொடர இந்த விருது வலுவூட்டும். பெரியார் இயக்கத்தின் மூத்த தலைவருக்கு, இந்த விருது கிடைத்திருப்பதை திராவிடர் விடுதலைக் கழகம் மகிழ்ந்து பாராட்டி, வரவேற்கிறது.

## சூலூர் கூட்டத்தில் - கொளத்தூர் மணி உரை

# பெரியார் அம்பேத்கர் கொள்கை உறவு

பெரியாரும் அம்பேத்கரும் ஒருவரை ஒருவர் சந்திக்காமலேயே கொள்கை உறவுடன் பயணித்தத் தலைவர்கள் என கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.

கலைஞர் நூற்றாண்டு விழா தமிழகம் எங்கும் பல்வேறு முறைகளில் நடந்து கொண்டு இருக்கிறது. கலைஞர் வாழ்ந்த காலத்தை விட, ஆட்சியில் இருந்த காலத்தை விட, அவர் இயங்க முடியாமல் படுக்கையில் இருந்த காலத்தில் தான் அவரைப் பற்றி ஏராளமான பதிவுகள் முகநூலில், செய்தித்தாள்களில் வந்து கொண்டே இருந்தன. இதையெல்லாம் கலைஞர் செய்தார் என்று யாருக்கும் தெரியாது, சாதனை விளக்கக் கூட்டம் போடுவார்கள் ஆனால் முதன்மை செய்திகளாக பேசபடாத செய்தி எல்லாம் அங்கு பகிர்ந்து கொள்ளப்பட்டன.


அமலோற்பவன் நாதன் என்ற ஒரு மருத்துவர் சொல்லுகிறார், இரத்த நாளத்திற்கான மருத்துவம், இந்தியாவில் எங்கும் இல்லாத அந்த பிரிவினை சென்னை மருத்துவக் கல்லூரியில் தான் முதல் முதலாக கொண்டுவரப்பட்டது என்ற செய்தியை அவர் சொன்னார். இவை 1970 களில் கலைஞர் ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்டது. அதில் முதலில் பயின்றவன் நான் என்றும் அவர் சொன்னார். இன்னும் இரண்டு மருத்துவ கல்லூரியில் மொத்தம் ஆறு மருத்துவ கல்லூரியில் அந்த சிறப்பு படிப்பு இருந்தது. இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்பதை சேர்த்துச் சொல்கிறார். அது யாருக்கும் தெரியாத செய்தி.

தகவல் தொழில்நுட்ப துறைக்கு தனிக் கொள்கை வகுத்து அதற்கான கட்டிடங்களை எழுப்பி டைடல் பார்க் என்று கொண்டு வந்தார். அதற்கு முன்பு யாரும் செய்யவில்லை. ஒன்றியத்தில் மட்டும் தான் நுகர்பொருள் வாணிபக் கழகம் இருந்தது. கலைஞர் தனியாக இங்கு தமிழ்நாட்டுக்கு என்று நிறுவினார். அது வேறு யாரும் செய்யவில்லை, அதற்கு பின்னால் பலபேர் பின்பற்றியிருக்கலாம்.

பெண்களுக்கான சொத்துரிமை பற்றி சொன்னார், அது பெரியார் செங்கல்பட்டு மாநாடு தீர்மானத்தைச் சொன்னார். புரட்சியாளர் அம்பேத்கர் இந்த சட்டத்தில் வடித்தது என்று சொன்னார். பெரியார் கூட சொல்லுவார் இதைப் பற்றி நினைக்கிற போது உங்கள் மனைவியை மனதில் கொண்டு நினைக்காதீர்கள், உங்கள் தங்கையை, மகளை மனதில் கொண்டு சிந்தியுங்கள் என்று பெரியார் சொன்னார். 1989இல் முதன்முதலாக பெண்களுக்கு சொத்துரிமை சட்டத்தை நிறைவேற்றியது கலைஞர் தான், அதற்கு பிறகு 2005 இல் தான் இந்தியா சட்டம் கொண்டு வந்தது.

புரட்சியாளர் அம்பேத்கரை பற்றி அவர் வாழ்ந்து இருந்த அல்லது பிறந்த மாநிலத்தில் கூட அவர் பெயரை வைத்ததற்கு எதிரான பெரும் போராட்டம் தீவைப்பு கலவரங்கள் எல்லாம் நடந்தன, மிக அமைதியாக தமிழ்நாட்டில் சட்டக் கல்லூரிக்கு புரட்சியாளர் அம்பேத்கர் பெயரை வைத்து சட்டக் கல்லூரி பின்னாலே சட்டப் பல்கலைக்கழகம் இப்படி எல்லாம் சமுதாயத்தின் தலைவர்களை உள்வாங்கிக் கொண்டு அவர்களை மக்களுக்கு என்றும் நினைவில் வைத்திருக்கத்தக்க அளவில் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

உண்மையிலேயே அம்பேத்கர் புரட்சியாளராக இருந்தவர், பெரியாருக்கும் அவருக்கும் ஏராளமான ஒற்றுமைகள், சிற்சில வேறுபாடுகள் வந்திருக்கலாம். நாங்கள் உரையாடலின் போது சொல்வோம், அரசியல் நிர்ணயசபையில் அமர்ந்திருந்த காலத்தை தவிர மற்ற எல்லா நேரங்களிலும் அவர் நம்முடைய ஆள்தான். சில நேரங்களில் பார்ப்பனர்களுடைய அழுத்தத்துக்கு ஆளாகி போய் சிலவற்றை செய்ய வேண்டிய நேர்ந்திருக்கிறது. அம்பேத்கர் பர்மாவில் நடத்திய புத்தர் மாநாட்டில் பெரியாரும் அங்கு அழைக்கப்பட்டிருக்கிறார், அம்பேத்கரும்



போயிருக்கிறார், கேட்கும் போது சொன்னார், நான் பேனாவை பிடித்துக் கொண்டிருந்தேன், ஆட்டுவித்தது எல்லாம் பார்ப்பனர்கள் தான் என்று பதிலளித்தார். இதை பெரியார் சொல்லியிருக்கிறார்.

அம்பேத்கரும் பெரியாரும் புத்தர் மாநாட்டிற்கு சென்றபோது உரையாடிக் கொண்டிருந்தனர், அப்போது புத்த பிட்சு ஒருவர் வருகிறார், அவர் பெரியாரைப் பார்த்து கேட்கிறார் நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்? நான் மதராசில் இருந்து வருகிறேன் என்று பெரியார் பதில் கூறினார். மாநாட்டிற்கு வந்தோம் என்றார், அருகில் இருந்த ஒருவர் இவர் பெரியார் ராமசாமி தெரியாதா உங்களுக்கு என்று சொல்கிறார். நீங்கள் மதத்தைக் காப்பாற்ற வந்தீர்களா? ஒழிக்க வந்தீர்களா? என்று பெரியாரைப் பார்த்து அந்த புத்த பிட்சு கேட்கிறார், உடனே நீங்கள் பார்ப்பனராக இருந்து புத்த மதத்திற்கு வந்தவரா என்று பெரியார் கேட்கிறார், அவர் வங்காள பார்ப்பான் ஆமாம் என்கிறார், அம்பேத்கரிடம் சொல்கிறார், இவர்களை எல்லாம் வைத்துக் கொண்டு என்னை இந்த மதத்திற்கு வா என்று சொல்கிறீர்கள் என்று வேடிக்கையாக பெரியார் சொன்னார்.

புரட்சியாளர் அம்பேத்கர் படத்தை அவர் மறைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் வேலூர் நகராட்சியில் பெரியார் திறந்து வைத்தார். அக்டோபர் மாதத்தில் படத்தை திறக்கிறார்கள், அம்பேத்கர் டிசம்பர் மாதத்தில் தான் இறக்கிறார். அந்த திறப்பு விழாவில் பேசுகிறார், புத்த மதத்தில் பார்ப்பனர்களை சேர்ப்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். குறைந்தபட்சம் தொடக்கக் காலங்களிலாவது அவர்களை சேர்க்கக் கூடாது என்று அம்பேத்கரும் பேசியிருக்கிறார். இருவரும் ஒரே கருத்தை தான் தனித்தனியாக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அம்பேத்கரைப் பற்றி பல பேர் பல விதங்களில் பேசியிருக்கலாம் ஆனால் புரட்சிக் கவிஞரைப் பொறுத்தவரையில்

> **எரிமலை எண்ணமும் எழும் புயல் செயலும்**
> **விரிவுலகத்தையே விழிப்புறச் செய்தன**
> **ஆரியக் கொட்டம் அடியோடு அழிய**
> **வீரியம் கொண்ட வெஞ் சின வேங்கை முன்**
> **மதத் திமிர் அழிந்தது சமயமும் மடிந்தது**

என்று அவரைப் பற்றி கவிஞர் பாரதிதாசன் சொல்வார்.

அதோடு நாம் எப்படி அவரை இணைத்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறோம் என்பதுதான், திராவிடர் இயக்கமாக நாம் பார்க்கிற போது எப்படி இருக்கிறோம். அவர் ஆற்றிய உரைகள், எழுதிய நூல்கள் பல உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் எழுதிய 'ஜாதியை ஒழிக்கும் வழி' அந்த நூல் தற்போது தலித் முரசு 'ஜாதி ஒழிப்பு' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது. அந்த உரை லாகூர் மாநாட்டில் பேசுவதற்காக தயாரிக்கப்பட்ட உரை. அதை படித்துப் பார்த்து அதிர்ந்து போன மாநாட்டு பொறுப்பாளர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். அதைக் கூட பெரியார் வேலூர் படத்திறப்பு விழாவில் பேசுகிறார், அதற்கு முன்பு அந்த ஜாதி ஒழிப்பு பேரவையில் என்னையும் துணைத் தலைவராக வைத்துக் கொண்டிருந்தார்கள். பொறுத்துக் கொள்ள முடியாத தமிழ்நாட்டு பார்ப்பனர்கள் இங்கிருந்து கடிதம் எழுதினார்கள், உன் மதமே வேண்டாம் என்கிறான் அவனை போய் வைத்திருக்கிறாய் என்று எழுதினார்கள். பிறகு விட்டு விட்டார்கள் என்று பெரியார் சொல்வார். அந்த அமைப்பில் பெரியாரும் பங்கெடுத்திருக்கிறார்.

அந்த தயாரிக்கப்பட்ட உரையை பார்த்தவுடன் பெரியார், 'இந்த உரையை நான் தமிழில் வெளியிடலாமா' என்று கேட்கிறார். பெரியாருக்கும் ஒரு படி அனுப்பி வைக்கிறார். உடனே பெரியார் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். குடிஅரசு இதழில் தொடர்ச்சியாக வெளியிட்டு, பின்னர் புத்தகமாக வெளியிட்டார். அது அவர் உரையாற்றிய இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகவே தமிழில் வெளிவந்து விட்டது. இந்தியாவிலேயே அந்த உரை முதன் முதலில் வேறு மொழியில் வெளியானது, தமிழில் தான், வெளியிட்டவர் பெரியார் தான்.

நான் பல இடங்களில் சொல்லுவேன், பாரதியார் பாடினார், பன்னாட்டு சாத்திரங்கள் தமிழில் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்று. அவர் பாட்டு தான் பாடினான். காரல் மார்க்ஸின் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை பெரியார் தான் முதலில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது முதலில் தமிழில் தான், அதை பெரியார் செய்தார். லெனினும் மதமும், பகத்சிங்கின் நான் ஏன் நாத்திகன் ஆனேன் எல்லாவற்றையும் பெரியார் தான் முதலில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்.

பெரியாரும் அம்பேத்கரும் ஒருவரை ஒருவர் சந்திக்காமலேயே அவர்களிடையே புரிதலும் நட்பும் இருந்தது. பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன் நட்பு என்று கூறுவார்களே, அதுபோல! இருவரும் சந்திக்காமலேயே அம்பேத்கர் மாநாட்டுக்கு பெரியார் வாழ்த்து அனுப்புகிறார், அம்பேத்கர் உரையை குடிஅரசு பத்திரிக்கையில் பம்பாயில் சுயமரியாதை முழக்கம் என்று தலைப்பிட்டு வெளியிடுகிறார். தென்னாட்டில் இருந்து சுயமரியாதை இயக்கத் தலைவர் ஈ.வெ.ராமசாமி அனுப்பிய வாழ்த்து செய்தி என்று மாநாட்டில் அது படிக்கப்படுகிறது. இப்படி அவர்கள் இருவருக்கும் தொடர்பு இருக்கிறது.

அதைவிட முக்கியமாக 1927 இல் மகத் சத்தியாகிரகம் என்று மகத் குளத்தில் நீர் எடுக்கும் போராட்டத்தை அம்பேதகர் நடத்துகிறார். நீரை நெருப்பு பிடித்தது என்று பத்திரிக்கையில் எழுதுகிறார். அந்தக் குளத்தில் நீரை அள்ளிக் குடிக்கிறார்கள் அவ்வளவுதான் போராட்டம், அதற்கு அந்த நகராட்சி அனுமதி கொடுத்துவிட்டது, பின்னால் அனுமதியை ரத்து செய்கிறார்கள், உடனே அதற்குப் பிறகு அவர்கள் தாக்கப்பட்டார்கள் என்பது அது ஒரு செய்தி, அதை சுத்திகரிப்பதற்கு அவர்கள் செய்த வேலை, மாட்டு சாணங்களைக் கொண்டு வந்து மாட்டு மூத்திரத்தையும் சாணத்தையும் ஏரியில் கொட்டி சுத்தம் செய்தார்கள். இவர்கள் தண்ணீர் எடுத்தது அசுத்தமாகிவிட்டதாம், 18 குடம் சாணியும் மூத்திரத்தையும் கொண்டு வந்து கொட்டிய உடனே மகத் குளம் சுத்தமாகிவிட்டது. அந்தக் கோஷ்டி தான் இப்பொழுது பாதயாத்திரை போய்க்கொண்டுள்ளது.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பாஜக ஊழலற்ற கட்சியா? (1)

***ஊழலுக்கு எதிராக பாஜக எடுத்த நடவடிக்கைகள் என்ன?***

*2013 ஆம் ஆண்டு ஊழலுக்காக தண்டனை பெற்றவர்கள் 1136, 2014 ஆம் ஆண்டு 993, 2015 ஆம் ஆண்டு 878, 2016-ம் ஆண்டு 71*

*லோக்பால் அமைப்பு இது ஊழலை விசாரிக்கும் அமைப்பு.பிரதமர், முன்னாள் பிரதமர், ஒன்றிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அரசின் குரூப் ஏ,பி,சி,டி பிரிவு அதிகாரிகள், அரசிற்கு தொடர்புடைய ஆணையங்கள் மற்றும் நாடாளுமன்ற சட்டத்தால் அமைக்கப்பட்டுள்ள அமைப்புகளிலுள்ள தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், 10 லட்சத்திற்கு மேல் அந்நிய நாட்டிலிருந்து நிதியுதவி பெறும் அமைப்புகள் ஆகியவைகள் குறித்து விசாரிக்க முடியும்.*




*இந்த அமைப்புக்கான மசோதா காங்கிரஸ் ஆட்சியில் 2013 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. ஆனால் 5 ஆண்டுகளாக லோக்பால் அமைப்பு ஏன் உருவாக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டு தான் உருவாக்கப்பட்டது.*

*லோக்பால் அமைப்பு உருவாக்கப்பட்டதில் இருந்து எத்தனை வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அதன் முடிவுகள் என்ன?*

- *தேர்தல் பத்திரங்கள் மூலம் மட்டும் 2018 முதல் 2022 வரை பாஜக 5270 கோடி நன்கொடையாக பெற்றுள்ளது. காங்கிரஸ் 964 கோடி மட்டுமே நன்கொடையாக பெற்றுள்ளது.*
- *60 ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்த கட்சிக்கு வெறும் 964 கோடி மட்டுமே நன்கொடையாக கிடைத்துள்ளது. வெறும் 9 ஆண்டுகள் ஊழலுக்கு எதிராக ஆட்சி செய்ததாக கூறும் பாஜகவிற்கு 5270 கோடி நன்கொடையாக கிடைத்துள்ளது.*
- *நாட்டை பாதுகாக்கிறோம் என்று கூறி நாட்டின் வளங்களை தேசிய பாஜக கொள்ளையடிக்கிறது என்றால், மாநிலங்களில் இருக்கும் பாஜகவினரோ நாட்டிற்கும், சட்டத்திற்கும் எதிராக வரி எய்ப்பு போன்ற மோசடிகளை செய்து வருகின்றனர்.*
- *வரி கட்டாமல் மோசடி செய்வது தான் நாட்டை பாதுகாக்கும் வழியா ?*
- *ஏழை எளிய மக்களின் பணத்தை கொள்ளையடிப்பது அதாவது இந்து மக்களின் பணத்தை கொள்ளையடிப்பது தான் நாட்டின் வளமா ?*
- *பாஜகவில் இணையாதவர்கள் இந்துக்களே இல்லை என்று பாஜகவினர் கூறி வருகின்றனர். அவர்கள் கூற்றுப்படியே பாஜகவில் உள்ள இந்துக்களின் பணத்தை பாஜகவினரே ஏமாற்றுவது என்ன நியாயம் ?*
- *பணத்தை திரும்பி கேட்டால் கொலை மிரட்டல் விடுக்கிறார்களாம். பாஜகவை விட்டு வெளியேறிய மாநில பொருளாளர் பிரிவு செயலாளரும் அதை உறுதி படுத்தியுள்ளார்.*
- *ஏழை இந்துக்களின் பணத்தை கொள்ளையடித்து ஒரு சிலரின் உயர்வுக்கு கொடுப்பது தான் பாஜகவின் அகில இந்திய கொள்கை போல!*
- *பாஜகவின் மாவட்ட பொறுப்பாளர் ஒருவர் வேலை வாங்கி தருவதாக பாஜகவின் உறுப்பினர் ஒருவரையே ஏமாற்றிவிட்டார் என்று மாநில தலைவர் அண்ணாமலையிடம் முறையிட்டால் எந்த வித நடவடிக்கையும் இல்லை. பிறகு அந்த பாஜக பிரமுகர் தமிழ்நாடு அரசு காவல்துறையிடம் சென்றார் பணத்தை ஏமாற்றியவர் கைது செய்யப்பட்டார்.*
- *தாங்கள் ஆட்சி செய்யாத அனைத்து மாநிலத்திலும் ஊழல் நடைபெற்றதாக கூப்பாடு போடும் பாஜகவினர் அவர்களின் கட்சி உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் என மோசடிக்களில் ஈடுபட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர்?*

தொகுப்பு : மனோஜ்

**தொடரும்**

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

**ஆண்டு சந்தா : ரூ.300**

**5 ஆண்டு சந்தா : ரூ.1500**

**தொடர்புக்கு : 8973341377**

**முதல் பக்கத் தொடர்ச்சி**

*சென்னப்பன், கண்ணாமூச்சி ஊராட்சி மன்ற இரண்டாவது வார்டு உறுப்பினர் மல்லிகா, தி.மு.க காந்திநகர் கிளைச் செயலாளர் தங்கராசு, பழனியப்பன், வி.சி.க. காந்திநகர் பொறுப்பாளர் எல்.ஐ. சி. மணி, தி.மு.க சேலம் மாவட்ட பிரதிநிதி தேவராஜ் (எ) தேவர் தலைமையில் செட்டியூர் தி.மு.க. பொறுப்பாளர் கண்ணன், தி.வி.க பொறுப்பாளர் வீ. ஈஸ்வரன், ஓய்வு பெற்ற ஆசிரியர் நடராஜ், கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் விஜயகுமார், இராம. செல்வராஜ், பூ. அண்ணாமலை கிளைச் செயலாளர் தி.மு.க, ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து காவை இளவரசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது .*

*அதனைத் தொடர்ந்து கழக தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், வி.சி.க. கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் சேட்டுக்குமார், சித்துசாமி, தமிழ்ப் புலிகள் கட்சியின் கொளத்தூர் பொறுப்பாளர் பிரசாந்த், வி.சி.க. தமிழ் நிலவன், சி.முருகேசன் தி.மு.க, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு ஆகியோர் சிறப்புரையாற்றினர். கா. சந்திரன், பச்சியப்பன், செ.செ.காட்டுவளவு பழனிசாமி, இளவரசன் ஆகியோர் நன்றி கூறினார்கள். கழகம் தயாரித்துள்ள பெரியார், அம்பேத்கர், தி.வி.க. கடந்துவந்த பாதை உள்ளிட்ட ஆவணப் படங்கள் திரையிடப்பட்டது.*

*திருப்பூர் : 25.07.23 செவ்வாய்க்கிழமை முதல் கூட்டம் அவிநாசி பேருந்து நிலையம் முன்பு காலை 10.30 மணிக்கு தொடங்கியது. அவிநாசி தாலுகா அலுவலகம் அருகில் 11:30 மணியளவிலும், சேவூர் நான்கு சாலை சந்திப்பில் 4 மணிக்கும், 7-வது கூட்டம் சேவூர் ராஜதானி அடுமனை அருகில் நடைபெற்றது.*

*அடுத்ததாக 26.07.2023 அன்று காலை 11 மணிக்கு போயம்பாளையம் பகுதியிலும் கூட்டம் தொடங்கியது, பின்னர் பெருமாநல்லூர் நான்கு சாலை சந்திப்பிலும், பிற்பகல் 3 மணிக்கு தெரவாலூரிலும் நடைப்பெற்றது. மாலை 5 குன்னத்தூரிலும் நடைப்பெற்றது. 31.07.2023 அன்று புதிய பேருந்து நிலையம் அருகிலும், மதியம் 1 மணிக்கு கொங்கு மெயின் ரோடு , கொடிமரம் அருகிலும், மாலை மாநகராட்சி அலுவலகம் முன்பும், 01.08.2023 வியாழன் காலை 11 மணிக்கு ராக்கியாபாளையத்திலும், மாலை சிடிசி ஸ்டாப் அருகிலும், 04.08.2023 அன்று உடுமலை, குமாரலிங்கம், மடத்துக்குளம், கணியூர், காரத்தொழுவு ஆகியப் பகுதிகளிலும் நடைபெற்றது. கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் தொடக்க உரையாற்றினார்.*

*ஆதித்தமிழர் பேரவை, துணை பொதுச்செயலாளர் அர.விடுதலைசெல்வன், பகுத்தறிவாளர் கழக மாவட்ட தலைவர் வெ.குமார ராசா,மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, சமூக விடுதலைக் கட்சி தலைவர் ஆறுமுகம், ஆதித்தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் அவிநாசி மணி, திருவள்ளுவர் மன்றத் தலைவர் அருண்குமார் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.*

*கழகப் பொருளாளர் சு.துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுசாமி, திருப்பூர் மகிழவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். சரசுவதி, தண்டபாணி ஆகியோர் நன்றி கூறினார்கள்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : Augest 10, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran